டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 1.09.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 062 - Madurai | Online Edition

# ஒருங்கிணைந்த உர மேலாண்மை அமைப்பு தரவு சார்ந்த புதிய கட்டத்திற்குள் நுழைகிறது

புது தில்லி, ஆக.31

இந்தியாவில் உர மேலாண்மையின் டிஜிட்டல் முதுகெலும்பாகத் திகழும் ஒருங்கிணைந்த உர மேலாண்மை அமைப்பானது, வெளிப் படைத்தன்மையை வலுப்படுத்துதல், உரங்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் உர விநியோகச் சங்கிலியைத் தரவுகள் அடிப்படையில் திறம்படக் கண்காணித்தல் ஆகிய நோக்கங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான டிஜிட்டல் முன்முயற்சிகள் மூலம் தற்போது ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைந்துள்ளது.

மத்திய உரங்கள் துறைக்காக தேசியத் தகவலியல் மையத்தால் உருவாக்கப்பட்டுத் தொழில்நுட்ப ஆதரவு அளிக்கப்படும் ஐஎஃப்எம்எஸ், உர உற்பத்தி, இறக்குமதி, சரக்குப் போக்குவரத்து, கையிருப்பு, சில்லறை விற்பனை மற்றும் மானியச் செயலாக்கம் உள்ளிட்ட உரச் சூழலியலின் அனைத்து முக்கிய நிலைகளையும் ஒருங்கிணைக்கிறது. தேசிய அளவில் செயல்படும் இந்த அமைப்பு, 14 கோடிக்கும் அதிகமான ஆதார் இணைக்கப்பட்ட உரக் கொள் முதல் செய்வோரையும், 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட சில்லறை விற்பனையாளர்களையும், ஆண்டுதோறும் சுமார் 7 கோடி மெட்ரிக் டன் அளவிலான உர விற்பனைப் பரிவர்த்தனைகளையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன், ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ரூ.2 லட்சம் கோடி மதிப்பிலான உர மானிய விநியோக நிர்வாகத்திற்கும் இது உறுதுணையாக விளங்குகிறது.

கடந்த சில ஆண்டுகளில், உரப் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்வதையும் தாண்டி, ஐஎஃப்எம்எஸ் கட்டமைப்பை ஒரு ஒருங்கிணைந்த கண்காணிப்பு மற்றும் முடிவெடுக்கும் தளமாக மேம்படுத்துவதில் மத்திய உரங்கள் துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. உர உற்பத்தி, இறக்குமதி, அனுப்புதல், கையிருப்பு மற்றும் சில்லறை விற்பனை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த

நிலவரத்தை அதிகாரிகள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில் புதிய தகவல் பலகைகளும் பகுப்பாய்வுக் கருவிகளும் உருவாக்கப் பட்டுள்ளன. இந்த அம்சங்கள் தேசிய, மாநில, மாவட்ட மற்றும் சில்லறை விற்பனையாளர் நிலைகளில் தொடர் கண்காணிப்பைச் சாத்தியமாக்குவதோடு, விநியோகத்தில் ஏற்படும் அசாதாரணப் போக்குகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவுகின்றன. இதனால், ஐஎஃப்எம்எஸ் மூலம் கிடைக்கும் பெரு மளவிலான பரிவர்த்தனைத் தகவல்கள், நுகர்வு முறைகளைக் கண்டறிவதற்கும், தரவுகள் அடிப்படையில் துல்லியமான கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்கும் பெரிதும் பயன்படுகின்றன.

இந்தப் பரிணாம வளர்ச்சியானது, விவசாயிகளுக்குச் சரியான நேரத்தில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், வெளிப் படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், நாட்டின் மிக முக்கியமான வேளாண் உள்ளீடுகளில் ஒன்றான உர விநியோகத்தை முழுமை யான தகவல்களுடன் நிர்வகிப்பதற்கும் நம்பகமான டிஜிட்டல் கட்டமைப்பை வலுப்படுத்துகிறது.

# ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஆக.31

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் பெரியஇலந்தைகுளம் கிரா மத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 28.08.26ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் பெரியஇலந்தைகுளம், கீழக்கரை, குட்டிமேய்க்கிபட்டி கிராமங்களிலிருந்து சுமார் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந் திரன், ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து பேசி அனைவரையும் வரவேற்றார்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்த குமார், வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட் களின் மானிய விவரங்கள் மற்றும் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். ஓய்வு பெற்ற வேளாண்மை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

அலுவலர் மகாராஜன், பேசுகையில் ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் மானாவாரி ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தில் ஆடு, மாடு வளர்ப்பு, சில்பாலின் மண்புழு உரம் தயாரிப்பு, தேனீ பெட்டி வளர்ப்பு, மீன் வளர்ப்பு முறைகள், பழக்கன்று செடிகள் வளர்ப்பு முறைகளின் தொழில் நுட்பங்களை எடுத்துரைத்து வேளாண்மையுடன் கால்நடைகளை வளர்க்கும் போது வருடம் முழுவதும் கூடுதல் வருவாயினையும் குடும்பத்தினர் அனை வருக்கும் வேலை வாயப்பினை பெறுவது மட்டுமின்றி கால்நடை களிலிருந்து கிடைக்கும் கழிவுகள் மண்புழு உர உற்பத்திக்கும் நிலத்திற்கு உரமாகப் பயன்படுவதால் உரச்செலவும் குறைகிறது. இதனால் பயிர்களிலிருந்து கூடுதல் மகசூல் கிடைக்கிறது. மேலும் மண்ணின் வளம் அதிகமாக பாதுகாக்கப்படுகிறது. ஒருங் கிணைந்த பண்ணையத்தில் கால்நடைக் கழிவுகளைக் கொண்டு பஞ்சகாவ் யத்தை தயாரித்து பசுந்தீவனம் மற்றும் வேளாண் பயிர்களுக்கு நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வளர்ச்சி ஊக்கியாகவும் பயன்படுத்தலாம். இதன் மூலம் இரசாயணமில்லா இயற்கை அங்கக வேளாண் வழிப்பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் எனவும் தேனீ வளர்ப்பு மூலம் வீட்டிற்கு தேவையான தேன் கிடைக்கும் எனவும் அதனை விற்பனை செய்து கூடுதல் வருமானம் பெறலாம் எனவும் அதில் உள்ள பொருட்கள் மருத்துவ பொருளாகவும் பயன்படுகிறது என எடுத்துக் கூறி தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும் உதவி வேளாண்மை அலுவலர் காதர்மொய்தீன், அலங்காநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தக்கைப்பூண்டு பசுந்தாள் பயிர் விதைகள், இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ரைசோபியம் மற்றும் நெல் நுண்ணூட்டம், தென்னை நுண்ணூட்டம் ஆகிய இடுபொருட்கள் மானிய விலையில் கிடைக்கிறது எனவும் இவற்றினை பயன்படுத்தி குறைந்த விலையில் அதிக மகசூல் பெற்றிடலாம் எனவும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். காந்திகிராம வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்ட மாணவிகள் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை செயல்விளக்கம் மற்றும் வரைபடம் மூலமும் தொழில்நுட்ப கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் வட்டார தொழில் நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் வசந்தி, சௌந்தராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



27. பீன்ஸ் சூப்

தேவையான பொருட்கள்

பீன்ஸ் - 1 கப்

வெங்காயம் - 1

பூண்டு - 2 பல்

மிளகு தூள் - ½ டீஸ்பூன்

உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

பீன்ஸை வேக வைத்து அரைக்கவும். வெங்காயம், பூண்டை வதக்கி சேர்த்து 5 நிமிடம் கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தினரால் இம்மாதம் நடைபெறும் பயிற்சிகள் மற்றும் நாள் ஆகியவை பற்றிய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நாள் | பயிற்சியின் தலைப்பு மற்றும் நடைபெறுமிடம் |
|---|---|---|
| 1. | 03.09.26 | இயற்கை விவசாயம் **இடம் : மாத்தூர்** |
| 2. | 08.09.26 | முந்திரிபழத்தில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் **இடம் : நறுமேட்டுக்குப்பம்** |
| 3. | 09.09.26 | சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் இடம் : மதுராந்தகநல்லூர் |
| 4. | 10.09.26 | சிறுதானியங்களில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் இடம் : நல்லூர் |
| 5. | 11.09.26 | நெல் மற்றும் பயறுவகை பயிரில் உழவியல் செயல்முறைகள் இடம் : மாடுர்சூடாமணி |
| 6. | 15.09.26 | உளுந்து மற்றும் பாசிபயிரில் சாகுபடி தொழில்நுட்பங்கள் இடம் : புதுக்குளம் |
| 7. | 15.09.26 | மண்வள மேலாண்மை இடம் : கனகரபட்டு |
| 8. | 15.09.26 | தளிர் கீரை பயிற்சி இடம் : வல்லம்படுகை |
| 9. | 16.09.26 | முந்திரியில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் இடம் : கே.வி.கே, விருத்தாசலம் |
| 10. | 19.09.26 | உளுந்து பயிரில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் : நல்லூர் |
| 11. | 22.09.26 | கத்தரிசெடியில் ஒட்டு கட்டுதல் இடம் : பெரியகோட்டுமலை |
| 12. | 23.09.26 | பண்னை இயந்திரங்கள் பற்றிய விழிப்புணர்ச்சி பயிற்சி இடம் : கம்மாபுரம் |
| 13. | 23.09.26 | கூட்டுமீன் வளர்ப்பு முறை இடம் : அகரம் |
| 14. | 26.09.26 | பருவநிலை மாற்றத்திற்கான மீள் தன்மையிள்ளா வேளாண்மை |
| 15. | 28.09.26 | தொழில்முனைவோருக்கான பயிற்சி இடம் : கார்கூடல் |
| 16. | 28.09.26 | கூட்டு மீன் வளர்ப்பு முறை இடம் : பரங்கிபேட்டை. |
| 17. | 30.09.26 | கரிமமுறையில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் இடம் : கே.வி.கே, விருத்தாசலம் |

# சத்தியமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி முறைகள் குறித்த கண்டுனர் சுற்றுலா

ஈரோடு, ஆக.31

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலான்மை முகமை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி முறைகள் குறித்த கண்டுனர் சுற்றுலா 27.08.26 மற்றும் 28.08.26 ஆகிய இரண்டு நாட்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அத்தியந்தல் (CENTRE OF EXCELLENCE FOR MILLETS, ATHIYANDAL) சிறுதானிய மையத்திற்கு 40 விவசாயிகளை அழைத்து சென்றனர்.




அவர்களுக்கு சிறுதானியங்கள் பயிரிடுவதின் முக்கியத்துவம் மற்றும் அதன் சிறப்புகள் குறித்தும், பூச்சி, நோய் தாக்குதல் கட்டுப்பட்டு முறைகள் குறித்தும், புதிய இரகங்கள் மற்றும் பயிர் செய்யும் பருவங்கள் மற்றும் நீர் தேவைகள், களை நிர்வாகம் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்தும் பேராசிரியர் மற்றும் தலைவர் சிறுதானிய மையம் அத்தியந்தல், விளக்கமாகவும் விரிவாகவும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் வயலில் ஆராய்ச்சி திடல் அமைத்துள்ள சிறுதானிய பயிர்களையும் மதிப்புக் கூட்டுதல் போன்ற அனைத்து செயல் முறைகளையும் செய்து விளக்கமாக கூறினார்கள். அதில் சத்தியமங்கலம் வட்டரத்தில் உள்ள கிராமங்களை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இக்கண்டுனர் சுற்றுலாவினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அங்கக வேளாண்மை/இயற்கை இடுபொருட்கள் தயார் செய்தல் பயிற்சி

திருவள்ளூர், ஆக.31

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் எல்லாபுரம் வட்டாரத்தில் உள்ள கல்பட்டு கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை /இயற்கை இடுபொருட்கள் தயார் செய்தல் என்ற தலைப்பின் கீழ் ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.



இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குனர் எல்லாபுரம் அ உமா மகேஸ்வரியின் ஆலோசனையின் கீழ் துணை வேளாண்மை அலுவலர் சிவகுமார், தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார் மற்றும் வேளாண் விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். ரசாயன உரங்கள் பயன்பாடு குறைத்தல், வரப்பு ஓரத்தில் பயறு வகை விதைப்பு, பசுந்தாள் உரம் அளிக்கும் தக்கைபூண்டு. சணப்பை விதைப்பு செய்தல், வயல்களில் பறவை தாங்கி அமைத்தல், சூரிய ஒளி விளக்கு பொறி வைத்து பூச்சிகள் கவர்ந்து அழித்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

வட்டார தொழிநுட்ப மேலாளர் சி.பாஸ்கர் பேசுவையில், வேளாண் இடுப்பொருட்கள் விற்பனை உரிமம் பெறும் வழிமுறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அங்கக இடுபொருட்கள் கீழ்கண்ட முறையில் தயார் செய்து விவசாயிகள் பயன்படுத்தியிட கேட்டுக் கொண்டார். ஜீவாமிர்தம் தயாரிப்பதற்கான தேவையான பொருட்கள் மற்றும் செய்முறை பற்றிய விவரங்கள் பின்வருமாறு கூறினார்.

**தேவையான பொருட்கள் :** மாட்டுச்சாணம் 10 கிலோ, மாட்டு கோமியம் 10 லிட்டர், வெல்லம் (அல்லது கரும்புச் சாறு 4 லிட்டர்) – 2 கிலோ, தண்ணீர் – 200 லிட்டர், கடலை மாவு / தட்டைப்பயறு மாவு /உளுந்து மாவு – 2 கிலோ, ஈரமான மண் – 1 கைப்பிடி, பிளாஸ்டிக் டிரம் (200 லிட்டர் கொள்ளளவு) 1 எண்ணம் 200 லிட்டர் தண்ணீரில் சாணம், கோமியம், வெல்லம் அல்லது கரும்புச் சாறு சேர்க்க வேண்டும்.

அதனுடன் கடலைமாவு/தட்டைப்பயறு மாவு/உளுந்து மாவு மற்றும் ஈரமான மண் ஆகிய அனைத்தையும் சேர்க்க வேண்டும். இவற்றை பிளாஸ்டிக் பக்கெட்டில் (டிரம்மில்) சேர்த்து நன்றாக மூடி வைக்க வேண்டும். தினமும் காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் கடிகார முள் சுழற்சி முறைப்படி (clockwise) நன்றாகக் கலக்கிவிட வேண்டும். இரண்டு முதல் மூன்று நாளில் இந்த ஜீவாமிர்தக் கரைசல் தயாராகிவிடும். இதனை தயாரித்த ஒரு வாரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். இந்த கரைசலை எப்போதும் நிழலில் வைத்து பராமரிக்க வேண்டும். கரைசலை வடிகட்டி, ஒட்டும் திரவம் (காதி சோப் அல்லது ஆறிய அரிசிக்கஞ்சி) சேர்த்துப் பயன்படுத்தலாம் என்று கூறினர் மேலும் அதனை பயன்படுத்தும் முறை இலை வழி தெளிப்பாக எல்லா வகை பயிர்களுக்கும் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் என்ற அளவில் பயன்படுத்தலாம். ஒரு லிட்டர் ஜீவாமிர்தத்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழி தெளிப்பால் பயன்படுத்தலாம் என்று கூறினர்.

உதவி வேளாண்மை அலுவலர் வ.முருகன், ஜீவாமிர்தம் பயன்கள் இரசாயன உரத்தால் மலடாகிய மண்ணிற்கு ஜீவாமிர்தம் ஒரு அருமருந்தாகும். இதை மண்ணில் அளிப்பதால் மண்புழுக்கள் அதிகரிப்பதோடு நுண்ணுயிர்களைப் பெருக்கும். பயிர்களுக்கு ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் கட்டுப்படுத்த படுத்தி மகசூல் அதிகம் பெறலாம் என கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் வ.முருகன், வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் நெல், பச்சைப்பயறு விதைகள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12.5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட்களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார். விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்பங்களான சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார்.

இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட அனைத்து விவசாயி களுக்கும் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது. வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுண்ணூட் கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத்துவத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்த செய்தல் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெயபிரசாத் எடுத்து கூறினர். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஏற்பாடு செய்திருந்தார்.

# மண்புழு உரம் மண்ணின் வளத்திற்கும் நிலையான வேளாண்மைக்கும் ஓர் இயற்கைத் தீர்வு

## மண்புழு உரம் என்றால் என்ன?

மண்புழு உரம் என்பது மண்புழுக்களின் உதவியுடன் மாட்டுச்சாணம், பயிர்க்கழிவுகள், உலர்ந்த இலைகள் மற்றும் பிற மக்கும் கரிமக் கழிவுகளைச் சிதைத்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் ஆகும். இதில் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் பயனுள்ள நுண்ணுயிர்கள் காணப்படுகின்றன. இது மண்ணின் வளத்தையும் பயிர்களின் வளர்ச்சியையும் மேம்படுத்துகிறது.



## தயாரிக்கும் முறை

நிழலான, குளிர்ச்சியான, காற்றோட்டமான மற்றும் நீர் தேங்காத இடத்தைத் தேர்வு செய்யவும். செங்கல், சிமெண்ட் அல்லது பிளாஸ்டிக் தொட்டியில் அடிப்பகுதியில் நீர் வெளியேறும் வகையில் வடிகால் வசதி ஏற்படுத்தவும். மாட்டுச்சாணம், உலர்ந்த இலைகள், வைக்கோல் மற்றும் காய்கறிக் கழிவுகளைச் சேகரித்து, பிளாஸ்டிக் போன்ற மக்காத பொருட்களை நீக்கவும். கழிவுகளை 10 – 15 நாட்கள் முன் மக்கச் செய்து, வெப்பம் குறைந்த பின்னர் பயன் படுத்தவும். தொட்டியில் உலர்ந்த இலைகள் அல்லது வைக்கோலை அடுக்காகப் பரப்பி, அதன் மேல் மக்கிய கரிமக் கழிவுகளைப் பரப்பவும். Eisenia fetida போன்ற மண் புழுக்களை கழிவுகளின் மீது விடவும். தேவையான அளவு தண்ணீர் தெளித்து ஈரப்பதத்தைப் பராமரிக்கவும். தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும். நேரடி சூரிய ஒளி, அதிக வெப்பம் மற்றும் மழையிலிருந்து படுக்கையைப் பாதுகாக்கவும். சுமார் 45 – 60 நாட்களில் கருமையான, நுண்ணிய, மணம் இல்லாதமண்புழு உரம் தயாராகும். அதை சலித்து, மண்புழுக்களைப் பிரித்து பயன்படுத்தலாம்.

## மண்புழு உரத்தின் பயன்கள்

மண்ணின் வளத்தையும் உயிர்ச்சத்தையும் அதிகரிக்கிறது. மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை மேம்படுத்துகிறது. மண்ணின் அமைப்பு மற்றும் காற்றோட்டத்தை மேம்படுத்துகிறது. வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. பயிர்களுக்கு தேவையான ஊட்டச் சத்துக்களை வழங்குகிறது. பயனுள்ள நுண்ணுயிர்களின் செயல் பாட்டை அதிகரிக்கிறது. இரசாயன உரங்களின் பயன்பாட்டை ஓரளவு குறைக்க உதவுகிறது. வேளாண் கழிவுகளை பயனுள்ள உரமாக மாற்றுகிறது.

**மண்புழு உரத்தை எவ்வாறு பயன்படுத்துவது?**

மண்புழு உரத்தை பயிரின் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம். நடவு செய்வதற்கு முன் மண்ணுடன் கலந்து அடியுரமாக இடலாம். காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களுக்கு குழியில் மண்ணுடன் கலந்து இடலாம். பழ மரங்களுக்கு மரத்தைச் சுற்றி மண்ணில் கலந்து பயன்படுத்தலாம். மண் பரிசோதனை மற்றும் வேளாண் துறை பரிந்துரைப்படி அளவை நிர்ணயிப்பது சிறந்தது.

தகவல் : ***ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, நான்காம் ஆண்டு மாணவர்கள், வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.***



# - விரைவில் -
# வானிலை ( மழை ) முன்னறிவிப்பு போல 'வறட்சி முன்னறிவிப்பு'




நாம் தினந்தோறும் வானிலை முன்னறிவிப்பு செய்திகளை நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி வாயிலாக கேட்டு வருகிறோம். இன்று மிதமான மழை, நாளை கனமழை, என்ற அறிவிப்பு போல விரைவில் வறட்சி முன்னறிவிப்பு விவசாயி களுக்காக விரைவில் வரும். இது குறித்து ஆய்வுகள் நடத்தப் பட்டு மகாராஷ்டிர மாநிலத்தில், 'சத்தாரா மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு மண்ணின் ஈரப்பதம் குறித்த தகவல்களை நான்கு வாரங்களுக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**வறட்சி என்றால் என்ன?**

வறட்சி (DROUGHT) என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் நீண்ட கால சாரசரி மழைப்பொழிவுடன் ஒப்பிடும் போது, ஒரு பருவம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மழைப்பொழிவு கணிசமாக குறைவால் ஏற்படும் தற்காலிக நீர் பற்றாக்குறை நிலையாகும் (ARIDITY).

வறட்சி என்பது மழை பெய்யாமல் அல்லது மழை குறைவாக பெய்வதால் மட்டும் ஏற்படுகிறது என்ற எண்ணம் தான் பலருக்கு இருக்கிறது. ஒவ்வொரு பகுதியில் நிலவும் வெப்பம் தீடீரென அதிகரித்து, அந்த பகுதியில் ஈரப்பதம் மளமளவென சரியும். இந்த திடீர் வறட்சி விவசாயிகளுக்கு ஏற்படுத்தும் இழப்பு கொஞ்சமல்ல.

இந்திய விவசாயம் முழுக்க முழுக்க பருவமழையை சார்ந்து உள்ளது. மழை எப்போது வரும்? எவ்வளவு வரும் என்பதோடு மட்டுமல்லாமல், மழைக்கு பின்னர் அந்த நீர் எவ்வளவு காலம் விளைநிலத்தில் தங்குகிறது என்பது தான் பயிர்களுக்கு முக்கியம்.

**எவ்வாறு வறட்சியை கணிக்கப்படுகிறது?**

சுருக்கமாக சொல்ல வேண்டுமெனில் வானத்தில் இருக்கும் செயற்கோள்களின் உதவியுடன் பூமிக்கு அடியில் உள்ள நீரை ஆராய்ந்து நாளைய வறட்சியை இன்றே கணித்து விவசாயி களுக்கு உதவுவது தான் இந்த வறட்சி முன்னறிவிப்பு.

**எந்த எந்த நாடுகளில் வறட்சி முன்னறிவிப்பு அறிவிக்கப் படுகிறது. தெரியுமா?**

ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் வறட்சி முன்னறிவிப்பு வசதிகள் உள்ளன. இருப்பினும் இந்தியாவில் தற்போது செயற்கை கோள் உதவியுடன் செயற்கை நுண்ணறிவை (ARTIFICIAL INTELLIGENCE) பயன்படுத்தி மிகத்துல்லியமாக வறட்சியை பற்றி கணிக்கப்படுகிறது. பயிர்களுக்கு நீர் பற்றாக்குறை சூழல் எப்போது வரும் என்பதை REMOTE SENSORS மூலமாக அறிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இந்த அறிவிப்பால் விவசாயிகளுக்கு என்ன பயன்?**

காலநிலை மாற்றத்தால் எந்த பகுதியில், வறட்சி உருவாகும் அபாயம் உள்ளது? பயிர்கள் மீது அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும்? எப்பகுதியில் நீர் மேலாண்மை எவ்வாறு மேம்படுத்தலாம்?

விவசாயிகள் எத்தகைய மாற்று நடவடிக்கை எடுக்க முடியும் என்பவற்றை புரிந்து கொண்டு விவசாயிகள் சாகுபடி பணியை மேற்கொள்ளலாம்.

எப்படி வறட்சியை சமாளித்து சாகுபடி செய்யலாம் என்ற எண்ணம் வரலாம். அல்லது அதிக நீர் தேவையான பயிரை பயிரிடாமல் குறைந்த வறட்சியை சமாளிக்க கூடிய ரகங்களை பயிரிடலாம் என்ற ஆலோசனை தரப்படும்.

இந்த வறட்சி முன்னறிவிப்பு தற்போதைய காலகட்டத்தில் அவசியமான ஒன்றாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விவசாயிகளுக்கு வேளாண் பண்ணையை இயந்திரமயமாக்கல் பற்றிய பயிற்சி

ஈரோடு, ஆக.31

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு வேளாண் பண்ணையை இயந்திரமயமாக்கல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா திட்டம்) மூலம் 27.08.26 மேட்டு நாசுவம்பாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண் பண்ணையை இயந்திரமயமாக்கல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டி பாளையம் விஞ்ஞானி மா.சிவா, வேளாண் பண்ணைகளில் இயந்திரங்களை பயன்படுத்தல் மூலம் விவசாயிகளுக்கு ஆட்கள் தேவை குறைவதையும், நேரம் சேமிக்கபடுவதையும் விளக்கமாக கூறினார்.

சி.சண்முகசுந்தரம், வேளாண் தொழிலில் இயந்திரங்களை பயன்படுத்துவதால் பண்ணையம் செய்வது மிகவும் சுலபமாக இருக்கும் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். கவுண்டர் ஏஜென்ஸி மூலம் பார்தசாரதி, கலந்து கொண்டுஇயந்திரங்களின் செய்பாடுகளை செயல்விளக்கமாக செய்து காட்டினார். மொபைல் ஓயர்லெஸ் சொலியஸ் மூலம் க.அரிகரன், கலந்து கொண்டு நுண்ணீர் பாசனத்தில் மொபைல் ஓயர்லெஸ் மூலம் செயல் படுத்துல் எவ்வாறு என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, வேளாண் அடுக்கு திட்டத்தின் மூலம் விவசாயிகளின் நில உடமைகளை ஆதாருடன் இணைக்கும் முறைகள் எவ்வாறு என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்.

உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன், அட்மா திட்டங்களின் செயல்பாடுகள், வேளாண் அடுக்கு திட்டத்தின் மூலம் விவசாயிகளின் நில உடமைகளை ஆதாருடன் இணைக்கும் முறைகள் மற்றும் உழவன் செயலி முலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நவீன வேளாண்மையில் துளசி சாகுபடி

**நாற்றங்கால் :** ஒரு எக்டர் நடவு செய்ய 12.5 கிலோ விதைகள் தேவைப்படும். விதைகளை மேட்டுப்பாத்திகளில் செப்டம்பர் முதல் நவம்பர் மாதங்களில் விதைக்க வேண்டும். விதைத்த 35 வது நாளில் 10 முதல் 15 செ.மீ உயரம் வளர்ந்த செடிகள் நடவு செய்ய தயார் ஆகிவிடும். தண்டு குச்சிகளின் மூலமும் பயிர் பெருக்கம் செய்யலாம்.

**நடுதல் :** நிலத்தை நன்கு பண்பத்தி கடைசி உழவின் போது எக்டருக்கு 2.5 தொழு உரம் மண்ணுடன் கலந்து இட வேண்டும். செடிகளை வரிசைக்கு வரிசை 30 செ.மீ செடிகளுக்கு இடையே 15 செ.மீ இடைவெளியில் நடவு செய்ய வேண்டும் நடுவதற்கு டிசம்பர் ஜனவரி மாதங்கள் ஏற்றது.

**பயிர் மேலாண்மை :** மருவ பயிருக்கு அடியுரமாக எக்டருக்கு 55.110.60 கிலோ என்ற அளவில் தழை மணி சாம்பல் சத்து இட வேண்டும். மேலுரமாக 55 கிலோ தழைச்சத்து உரத்தை நூறு நாட்கள் கழித்து அதாவது முதல் அறுவடையின் போது இட வேண்டும். மருவு பயிர் மெதுவாக வளரும் தன்மை உடையதால் களைகளை அவ்வப்போது அகற்றி சுத்தப்படுத்த வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தை பொறுத்து நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு :** அசுவினி அசுவினியை கட்டுபடுத்த டைமீ தோயேட் அல்லது மீதைல் டைமெட்டான் ஒரு லிட்டர் நீருக்கு 2 மி.லி மருந்து கலந்து தெளிக்க வேண்டும்.

**அறுவடை :** நடவு செய்த 100 நாட்களில் தழை அறுவடை செய்யலாம். பின்னர் 30 - 40 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்து கொண்டு இருக்கலாம். நன்கு பராமரித்து வந்தால் மருவு பயிரை இரண்டு வருடம் பராமரிக்கலாம். இதன் மூலம் ஆண்டுக்கு 10 டன் மகசூல் கிடைக்கும். துளசி நம் நாட்டில் புனிதமான ஒரு பயிராக கருதப்படுவதால் பொதுவாக எல்லா வீடுகளிலும் வளர்க்கப் படுகின்றது. ஆன்மீக சடங்களுக்கும் அதிகளவில் பயன்படுத்தப் படுவதுடன் இதன் இலைகள் நறுமணம் கொண்டதாகவும் பச்சை நிறத்துடனும் இருப்பதால் மாலைகளில் சம்பங்கியுடன் கலந்தும் உபயோக படுத்தப்படுகிறது. துளசி இலைகள் வெளிநாடுகளில் சூப் போன்ற உணவு பொருட்களுக்கு மணமூட்டும் பொருளாக முக்கிய இடம் வகிக்கின்றது. துளசி மருத்துவ பயன்களையும் கொண்டது. துளசி சாறு சுவாசம் சம்மந்தமாக நோய்களையும் காதுவலியையும் நீக்க வல்லது.

துளசியில் இருந்து நறுமண எண்ணெய் தயாரிக்கப் படுகிறது. இந்த எண்ணெய் (Basil Oil) என்று அழைக்கப் படுகின்றது. இதில் யூஜினால் தைமால் மற்றும் லினலூல் ஆகிய வேதிப் பொருட்கள் அடங்கியுள்ளன. துளசிக்கு நல்ல சூரிய வெளிச்சம் தேவைப் படுகிறது. குறைந்தது ஆறு முதல் எட்டு மணி நேரம் நல்ல வெயில் பட வேண்டும். வெப்ப காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேணடும். அதிக பனி மற்றும் மூடு பனியை தாங்கும் சக்தி கிடையாது. துளசி மணற்பாங்கான நிலத்தில் நன்கு வளரும், எனினும் அங்கக சத்து நிறைந்த சிறந்த வடிகால் வசதியுடன் கூடிய மண் உகந்தது. மண்ணின் கார அமிலத் தன்மை 6 முதல் 7.5 க்குள் இருக்க வேண்டும்.

**பயிர் பெருக்கம் :** துளசி விதைகள் மூலம் பயிர்பெருக்கம் செய்யப்படுகிறது. சிறிய குழிகளை வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியிலும் அமைத்து அதில் துளசி விதைகளை நேரடியாக போட வேண்டும். விதைத்த 5 முதல் 7 நாட்களில் விதைகள் முளைத்து விடும். நாற்றுகளில் இரண்டு முதல் மூன்று இலைகள் தோன்றிய உடன் நாற்றுகளை 30 X 30 செ.மீ இடைவெளி இருக்குமாறு அமைத்து மீதி நாற்றுகளை கலைத்து விட வேண்டும்.

**உர மேலாண்மை :** துளிசி மருத்துவ ரீதியாகவும் பயன்படுத்த படுவதால் இதனை அங்கக வேளாண்மை முறையில் சாகுபடி செய்வது சாலசிறந்தது. எனவே விதைகளை விதைக்கும முன் கட்டிகள் இல்லாமல் நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் ஒரு ஹெக்டருக்கு 25 டன் தொழுஉரம் இட வேண்டும். பின்னர் முதல் அறுவடையின் போது எக்டருக்கு 10 டன் தொழு உரம் அல்லது 2.5 டன் மண்புழு உரம் போடவேண்டும்.

**நீர் மேலாண்மை :** துளசிக்கு அதிக வெப்ப காலத்தில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். துளசி செடிக்கு மூடாக்கு போடுவது களைகளை கட்டுப்படுத்தி, நீரை சேமித்து அதிக மகசூலை கொடுக்கும்.

**கவாத்து :** செடிகளை 20 நாட்களுக்கு ஒரு முறை நிலத்திலி லிருந்து 10 செ.மீ உயரம் வரை விட்டுவிட்டு மீதி இலை மற்றும் தண்டுகளை வெட்டி விட வேண்டும். இதனால் அதிக பக்க கிளைகள் தோன்றி ஒரு குத்து செடி போல வளரும். எனவே அதிக மகசூல் இழப்பு ஏற்படும்

**மகசூல் :** பூ பூப்பதற்கு முன் இலைகளைஅறுவடை செய்ய வேண்டும். பூ மலர்வதற்கு விட்டுவிட்டால் அதிக தழைகள் மற்றும் கிளைகள் தேன்றாது. எனவே பூப்பதற்கு முன் நிலத்திலிருந்து ஒரு அடுக்கு இலைகளை விட்டுவிட்டு மீதி இலைகளை வெட்டி அறுவடை

செய்ய வேண்டும். முதல் அறுவடையை நட்ட 45 ஆம் நாள் செய்ய லாம். பின்னர் 20 நாட்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யலாம். இவ்வாறு நிலத்தில் ஒரு பயிரை 2 முதல் 2 டி வருடங்கள் வரை வைத்திருக்கலாம். ஒரு எக்டரில் இருந்து ஒரு வருடத்திற்கு 3500 முதல் 4000 கிலோ வரை இலைகள் கிடைக்கும். துளசி இலை களை பறித்த உடனேயே பயன்படுத்தலாம். மேலும் காய்ந்த இலைகள் மருத்துவ ரீதியாகவும் மணமூட்டும் வாசனை பொருள் மற்றும் வாசனை திரவியம் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. துளசி கொத்துகளை தலைகீழாக தொங்கவிட்டு ஒரு வார காலம் நன்கு உலர்ந்த காற்றோட்டம் நிறைந்த அறைகளில் உலர வைக் கலாம். இலைகள் நன்கு உலர்ந்த உடன் அவற்றை காற்றுபுகாத ஜாடிகளிலோ அல்லது பிளாஸ்டிக் பைகளிலோ அடைத்து அதிக வெளிச்சமும் வெப்பமும் புகாத இடங்களில் வைத்து பாதுகாக்கலாம். குளிர் சாதன முறையிலும் பாதுகாக்கலாம்.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***

# குறுங்குளத்தில் கிராம மக்களுடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு [PRA]



தஞ்சாவூர், ஆக.31

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதி ஆண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ஷப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் குறுங்குளம் கிராம மக்களுடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) மேற்கொண்டனர்.

இதன் ஒரு பகுதியாக, கிராம மக்களின் தேவைகள், பிரச்சினைகள், வளங்கள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளை அறிந்து கொள்ளும் வகையில் கனவு வரைபடம் (Dream Map), மீன் எலும்பு வரைபடம் (Fish Bone Diagram), காலவரிசை வரைபடம் (Timeline Map) மற்றும் சுகாதார வரைபடம் (Health Map) ஆகியவை அவர்களின் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டன.

கனவு வரைபடத்தின் மூலம் கிராம மக்களின் எதிர்காலத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளும், மீன் எலும்பு வரைபடத்தின்

மூலம் முக்கிய பிரச்சினைகளுக்கான காரணங்களும் கண்டறியப் பட்டன. காலவரிசை வரைபடத்தின் மூலம் கிராமத்தின் முக்கியமான கடந்தகால நிகழ்வுகள் மற்றும் மாற்றங்களும், சுகாதார வரைபடத்தின் மூலம் கிராமத்தில் உள்ள சுகாதார வசதிகள் மற்றும் அவற்றை மக்கள் அணுகும் முறைகளும் பதிவு செய்யப்பட்டன.

இச்செயல்பாடுகள் மூலம் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் அவர்களின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் வளங்களைப் புரிந்து கொண்டு, கிராமத்தின் தற்போதைய நிலையை ஒருங் கிணைந்த முறையில் அறிந்து கொள்ள முடிந்தது.



# திருப்பூர் மாவட்டத்தில் இப்கோ வயல் விழா







திருப்பூர், ஆக.31

திருப்பூர் மாவட்டம், கொட்டமங்கலம் கிராமத்தில் தக்காளி பயிரில் நானோ உரங்கள் தெளிப்பு தொடர்பான வயல் விழா நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது, பங்கேற்ற விவசாயிகளுக்கு இப்கோ நானோ உரங்கள், சாகரிகா மற்றும் நீரில் கரையும் உரங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம், பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்து இப்கோ கள அதிகாரி சரவணன் அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது.

மேலும், சங்கட் ஹரன் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. நிலத்தின் வளத்தைப் பாதுகாத்து, நீடித்த மற்றும் நிலையான விவசாயத்தை மேற்கொள்வதற்கு மண் ஆரோக்கியத்தைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அனைத்து விவசாயிகளுக்கும் பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

# கொடுமுடி வட்டாரத்தில் இயற்கை விவசாயம் குறித்த விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஆக.31

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம் வேளாண்மைத் துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கொளத்துப்பாளையம் வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்த விவசாயிகள் பயிற்சி (Organic Farming/ Naturai Farming) நடைப்பெற்றது. இந்த பயிற்சியில் இயற்கை விவசாயி சக்திவேல், தனது அங்கக வேளாண்மையின் அனுபவம் பற்றியும் அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் மேலும் இயற்கை




இயற்கை உரங்கள் தயாரித்தல் மற்றும் இயற்கை பூச்சி விரட்டி தயாரிக்கும் முறைகள் பற்றி கூறினார். இந்த பயிற்சியில் கே.வி.கே மைராடாவில் இருந்து ஜான் பிரபாகர், வேளாண்மை அறிவியல் நிலை திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி எடுத்து கூறினார். மேலும் அவர் இயற்கை விவசாயம் பற்றியும் மண் வளத்தை மேம்படுத்துதல் இராசயான உரங்கள் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரங்கள் பயன்படுத்துதல் மற்றும் உயிர் உரங்கள் பயன்கள் பற்றியும் எடுத்து கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் மஞ்சுரேகா, சிதம்பரம் ஆகியோர் செய்திருந்தனர்.

# விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, ஆக.31

ஈரோடு மாவட்டத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவிகள் லேகா ஸ்ரீ, திரிதா, நிஷா பார்ஜோ, ஆனந்தி, நதியா மற்றும் கவி வர்ஷினி ஆகியோர் பேராசிரியர்கள் டாக்டர் மீனா மற்றும் டாக்டர் பாரதி ஆகியோருடன் இணைந்து விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு குறித்த பயிற்சியை வழங்கினர். பயிற்சியின் போது காளான் வளர்ப்பிற்கு தேவையான மூலப்பொருட்கள், படுக்கை தயாரித்தல், விதையிடுதல், ஈரப்பதம் மற்றும் வெப்பநிலை பராமரிப்பு, அறுவடை மற்றும் சேமிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. குறைந்த நிலப்பரப்பு மற்றும் குறைந்த முதலீட்டில் காளான் வளர்ப்பை மேற்கொண்டு கூடுதல் வருமானம் பெற முடியும் என மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

மேலும், வேளாண் கழிவுகளான வைக்கோல் போன்றவற்றை காளான் வளர்ப்பில் பயன்படுத்துவதன் மூலம் கழிவுகளை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி கூடுதல் வருமானம் பெறலாம் என விளக்கினர். விவசாயிகள் காளான் வளர்ப்பை துணைத் தொழிலாக மேற்கொண்டு தங்களது வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என மாணவர்கள் வலியுறுத்தினர்.

# திருப்பூர் எல்.ஆர்.ஜி., கல்லூரியில் மூலிகைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி : பெண்கள், மாணவிகள் ஆர்வம்




திருப்பூர், ஆக.31

பாரதியார் பல்கலைக்கழகத்தின் ‘ரூசா 2.0’ (BCTRC – RUSA 2.0) திட்டத்தின் கீழ், திருப்பூர் எல்.ஆர்.ஜி., அரசு மகளிர் கலைக் கல்லூரியின் தாவரவியல் துறை சார்பில், பெண்களுக்கான இரண்டு நாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் கடந்த 27 மற்றும் 28 ஆகஸ்ட் நாட்களில் அச்கல்லூரியில் நடைபெற்றது. பெண்களின் தொழில்முனைவுத் திறனை மேம்படுத்தும் வகையில் ‘பெண்கள் மேம்பாடு மூலிகைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி’ என்ற தலைப்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில், கல்லூரி மாணவிகள், பெண் தொழில் முனைவோர் மற்றும் வேலையில்லாப் பெண்கள் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் சுமதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை, தாவரவியல் துறைத் தலைவரும் பயிற்சி ஒருங்கி ணைப்பாளருமான முனைவர் பாலசரவணன் ஒருங்கிணைத்தார். இயற்கை மூலிகைகளைக் கொண்டு அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்கள் தயாரிப்பது குறித்து நேரடி செயல்முறை விளக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**பயிற்சியில் துறைசார் நிபுணர்கள் வழங்கிய விவரம்**

**தனிநபர் பராமரிப்புப் பொருட்கள் :** மதுரை டெரிஜென் இன்னோவேன் நிறுவனத்தின் மூலிகைப் பொருட்கள் தொழில்முனைவோர் எம்.சுவாதி, தாவர மூலிகைகளில் இருந்து இயற்கை முறையில் தனிநபர் பராமரிப்புப் பொருட்கள் தயாரிக்கும் நுட்பங்களை செயல் முறையுடன் விளக்கினார்.

**மூலிகை சோப் தயாரிப்பு :** சென்னை சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனத்தின் உதவிப் பேராசிரியர் டாக்டர் ஆர்.வெங்கடேஷ், மூலிகைகளைக் கொண்டு தோல் பாதுகாப்பு சோப்புகள் தயாரிக்கும் முறைகள், மூலப்பொருட்கள் தேர்வு மற்றும் பல்வேறு தயாரிப்பு உத்திகள் குறித்து பயிற்சி அளித்தார்.

**இயற்கை அழகு சாதனப் பொருட்கள் :** கோவை நிர்மலா மகளிர் கல்லூரி தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் எம்.சாரதா, இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி ரசாயனக் கலப்பற்ற அழகு

சாதனப் பொருட்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் ஃபார்முலேசன் நுட்பங்களை விரிவாகக் கற்பித்தார். பயிற்சியில் பங்கேற்ற அனை வருக்கும் பயிற்சி உபகரணங்கள் மற்றும் கையேடுகள் வழங்கப் பட்டன. மூலிகைப் பொருட்கள் தயாரிப்பில் போதிய அனுபவமும் அறிவும் பெற்றதன் மூலம், எதிர்காலத்தில் சுய தொழில் தொடங்கு வதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாகப் பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். பயிற்சியின் நிறைவாக, வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்த மாணவிகள் மற்றும் பெண்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# விவசாயிகளுக்கு வி.ஏ.எம் உற்பத்தி குறித்த தொழில்நுட்ப பயிற்சி

ஈரோடு, ஆக.31

ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையின் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் புஞ்சைதுறையம்பாளையம் கிராமத்தில் வி.ஏ.எம் என அழைக்கக் கூடிய பயிர் பாதுகாப்பு உயிரியல் காரணி உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் புஞ்சைதுறையம்பாளையம் கிராமத்தை சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட உழவர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குநர் அமுதா தலைமையேற்று தொடங்கி வைத்தார். மேலும் பசுந்தாள் பயிர்களின் மூலம் மண் வளத்தை மேம் படுத்துதல், இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரப் பயன்பாட்டை மேம்படுத்தவேண்டும். மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் இதன் மூலம் மண் வளம் காக்கப்படும் என்பதை தெளிவாக எடுத்துக் கூறினார். இரசாயன உரங்களின் செலவைக் குறைக்க மண் மாதிரிகள் எடுப்பது குறித்தும், மண் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் உரம் இடவேண்டும் என்றும் கூறினார். இதன் மூலம் தேவைக்கு அதிகமான உரமிடுதலை தவிக்க முடியும் எனக் கூறினார்.

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை அறிவியல் நிலையம் வேளாண் விஞ்ஞானி சரவணக்குமார் வி.ஏ.எம் உற்பத்தி குறித்தும், அதன் பயன்பாடு குறித்தும் தெளிவாக கூறினார். வேளாண்மை அலுவலர் ஆனந்தி வேளாண்துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள், பயி;ர் காப்பீடு பற்றியும் எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சு.அரவிந்தன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரா.மணி கண்டன், மற்றும் காவேரி ஆகியோர் செய்திருந்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW  isha  POWERGRID  BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பூச்சிகள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்!

பல்லுயிர்கள் பாதுகாப்போம், இயற்கைச் சமநிலை காப்போம். இது ஒரு முழுக்கமாக மட்டுமல்லாமல், இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய நமது கடமையின் வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும்.

இயற்கை என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய எண்ணற்ற உயிரினங்களின் அழகிய வலைப்பின்னல். அதில் சிறியதாகத் தோன்றும் பூச்சிகளுக்கும் மிகப்பெரிய பங்கு உண்டு. வண்ணத்துப் பூச்சி, தேனீ, தும்பி, பொறிவண்டு, சிலந்தி போன்ற பல உயிரினங்கள் மகரந்தச் சேர்க்கை, மண் வளம், பூச்சிக் கட்டுப்பாடு போன்ற பணிகளின் மூலம் இயற்கையின் சமநிலையை நிலை நிறுத்துகின்றன. சில பூச்சிகள் மனிதர்களுக்கும் பயிர்களுக்கும் தீங்கு விளைவித்தாலும், அனைத்து பூச்சிகளும் தீங்கு விளைவிப்பவை அல்ல.

### உணவுச்சங்கிலியில் பூச்சிகளின் பங்கு

இயற்கை படைத்த அற்புத உணவுச்சங்கிலியில் ஓர் அங்கம் அல்லவா இவை? என்ற கேள்வி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. பூச்சிகள் பல பறவைகள், தவளைகள், மீன்கள், ஊர்வன மற்றும் பிற உயிரினங்களுக்கு உணவாகின்றன. அதே வேளையில், சில பூச்சிகள் தாவரங்களை உண்டு அவற்றின் எண்ணிக்கையை இயற்கையாகக் கட்டுப்படுத்துகின்றன. இவ்வாறு ஒவ்வொரு உயிரினமும் மற்றொரு உயிரினத்துடன் தொடர்புடையதாக உள்ளது.

ஒரு தீங்கு விளைவிக்கும் பூச்சியை அழிப்பதற்காக அளவுக்கு அதிகமாக நச்சுப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தினால், அந்தப்பூச்சியுடன் சேர்ந்து நன்மை செய்யும் பூச்சிகளும் அழிந்து போகலாம். இதனால் உணவுச்சங்கிலி பாதிக்கப்பட்டு, இயற்கைச் சூழ்நிலை சமநிலை சீர் குலையும்.

### இயற்கையின் அற்புதமான தீர்வு உயிரியல் கட்டுப்பாடு

தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த இயற்கை நமக்கு வழங்கிய சிறந்த வழிகளில் ஒன்று உயிரியல் கட்டுப்பாடு ஆகும். தீங்கு விளைவிக்கும் பூச்சிகளுக்கு இயற்கையாகவே எதிரிகளாகச் செயல்படும் உயிரினங்களைப் பயன்படுத்தி அவற்றின் எண்ணிக் கையைக் கட்டுப்படுத்துவதே உயிரியல் கட்டுப்பாடு. உதாரணமாக, பொறி வண்டுகள் அசுவினிகளை உண்கின்றன. சில குளவிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டைகள் அல்லது புழுக்களைத் தாக்குகின்றன. சிலந்திகள் பல பூச்சிகளைப் பிடித்து உண்கின்றன.

இத்தகைய இயற்கை எதிரிகளைப் பாதுகாப்பதன் மூலம் பயிர்களைக் காக்க முடியும்.

தீயபூச்சிகளை அழிப்போம் என்பதற்குப் பதிலாக
தீயபூச்சிகளை இயற்கை வழியில் கட்டுப்படுத்துவோம் –

என்ற அணுகுமுறை உருவாக வேண்டும்.

**உயிரியல் பல்வகைத்தன்மையே இயற்கையின் பலம்**

ஒரு வயலில் ஒரே ஒரு உயிரினம் மட்டுமே ஆதிக்கம் செலுத்தாமல், பல்வேறு தாவரங்கள், பூச்சிகள், பறவைகள், நுண்ணுயிரிகள் உள்ளிட்ட உயிரினங்கள் வாழ்வதே உயிரியல் பல்வகைத் தன்மை ஆகும். இந்தப் பல்வகைத் தன்மை அதிகமாக இருக்கும் சூழலில் இயற்கையின் தற்காப்புத் திறனும் அதிகமாக இருக்கும். தேனீக்கள் மற்றும் வண்ணத்துப்பூச்சிகள் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. மண்புழுக்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துகின்றன. சில நுண்ணுயிரிகள் ஊட்டச்சத்துச் சுழற்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில பூச்சிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகின்றன. எனவே, ஒவ்வொரு உயிரினத் திற்கும் இயற்கையில் ஒரு பணி உண்டு.

**நலமான விவசாயத்திற்கான இயற்கை வழி**

விவசாயத்தில் அதிக அளவு இரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவது உடனடி தீர்வாகத் தோன்றலாம். ஆனால் அதன் நீண்டகால விளைவுகளை நாம் சிந்திக்க வேண்டும். மண், நீர், காற்று ஆகியவை மாசுபடுவதுடன், நன்மை செய்யும் பூச்சிகளும் அழியக்கூடும். மேலும், சில தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் மருந்து களுக்கு எதிர்ப்புத் திறனைப் பெறுவதால் பிரச்சினை மேலும் தீவிர மாகலாம். இதற்கு மாற்றாக ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) போன்ற முறைகளைப் பின்பற்றலாம். வயலில் பூச்சிகளின் எண்ணிக்கையை தொடர்ந்து கண்காணித்தல், இயற்கை எதிரி களைப் பாதுகாத்தல், தேவையான இடங்களில் உயிரியல் கட்டுப் பாட்டு முறைகளைப் பயன்படுத்துதல், பயிர் சுழற்சி செய்தல் போன்ற அணுகுமுறைகள் நலமான விவசாயத்திற்கு உதவும். நல்ல பூச்சிகளைக் காப்பது என்பது பூச்சிகளை மட்டும் காப்பதல்ல; விவசாயத்தின் எதிர்காலத்தையும் காப்பதாகும்.

**நலமான விவசாயம் நலமான வாழ்க்கை**

நாம் உண்ணும் உணவு ஆரோக்கியமாக இருக்க வேண்டு மெனில், அந்த உணவு உருவாகும் மண்ணும் நீரும் ஆரோக்கிய மாக இருக்க வேண்டும். மண் ஆரோக்கியமாக இருக்க வேண்டு மெனில் அதில் வாழும் எண்ணற்ற உயிரினங்களும் பாதுகாக்கப்பட

வேண்டும். எனவே, ஆரோக்கியமானமனித வாழ்க்கைக்கும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு உள்ளது.

இயற்கையை வென்று வாழ முடியாது; இயற்கையுடன் இணைந்து வாழ்வதே நிலையான வாழ்க்கை.

**முடிவுரை**

பூச்சிகள் சிறியவை; ஆனால் அவற்றின் பங்கு சிறியதுஅல்ல. ஒரு சிறிய தேனீயின் செயல்பாடு கூட ஒரு தாவரத்தின் இனப்பெருக்கத்திற்கு உதவலாம். ஒரு சிறிய பொறிவண்டு கூட பயிரைக் காக்கும் இயற்கை காவலனாக இருக்கலாம். எனவே, நன்மை செய்யும் பூச்சிகளை அடையாளம் கண்டு பாதுகாப்பதும், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை இயற்கை வழிகளில் கட்டுப்படுத்துவதும் நமது பொறுப்பு.




பூச்சிகள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம், பல்லுயிர்கள் பாதுகாப்போம், இயற்கைச் சமநிலை காப்போம்; இயற்கைச் சமநிலை காப்போம், நலமான விவசாயம் வளர்ப்போம்; நலமான விவசாயம் வளர்ப்போம், நலமான வாழ்க்கை வாழ்வோம்!

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். கைபேசி எண் : 82480 80922.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நடப்பு பருவத்தில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேளாண்மை உதவி இயக்குநர் வேண்டுகோள்!

ஈரோடு, ஆக.31

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடப்பு 2026 காரீப் பருவத்தில் வேளாண்மை பயிர்களை பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ள பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டார்.

இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி 2026-27-ஆம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது நிலவும் ‘எல் நினோ‘ நிகழ்வின் தாக்கத்தால் தென்மேற்கு பருவமழை இயல்பைவிட குறைவாக இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், குறுவை மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், 2026 காரீப் பருவத்தில், மக்காச்சோளம் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

| பயிர் | பிரீமியத் தொகை (ரூபாய்/ஏக்கர்) | காப்பீட்டுத் தொகை (ரூபாய்/ஏக்கர்) | காப்பீட்டு செய்யக் கடைசி நாள் |
|---|---|---|---|
| மக்காச்சோளம் | 740.00 | 37,000/ஏக்கர் | 16.09.26 |
| நிலக்கடலை | 678.00 | 18,700/ஏக்கர் | 16.09.26 |

இத்திட்டத்தின் கீழ், மகசூல் இழப்பு, பகுதி சார்ந்த மற்றும் பயிர் வளர்ச்சி கால இடர் நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு போன்ற இனங்கள் காப்பீடு செய்யப்படுகின்றன. கடன் பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்கள் (இ-சேவை மையங்கள்) அல்லது தேசிய பயிர்க் காப்பீடு இணைய தளத்தில் (https://pmfby.gov.in/) உள்ள ‘விவசாயிகள் கார்னர்‘ வாயிலாக நேரடியாகவும் பதிவு செய்து கொள்ளலாம். காப்பீடு செய்வதற்கான இறுதி தேதி எக்காரணத்திற்காகவும் நீட்டிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும் போது முன் மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் / விதைப்பு அறிக்கை கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்கநகல், ஆதார் அட்டை (Aadhaar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பெற்றுக் கொண்டு, அதில் தாங்கள் காப்பீடு செய்த பயிர் மற்றும் அதற்கான கிராமம்/குறு வட்டம் உள்ளிட்ட விவரங்கள் சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளதா என்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ, வேளாண்மை அலுவலரையோ, உதவி வேளாண்மை அலுவலரையோ வங்கி கிளைகளையோ அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் இப்பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் தங்கள் மாவட்டங்களில் அறிவிக்கை செய்த பகுதிகளில் அறிவிக்கை செய்த பயிர்களைக் காப்பீடு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

